இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 2010 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

*(2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2010, ஒற்றோபர் மாதம் 08 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## 2010 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 5 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 52/2007

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :$

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 338 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 338 ஆம் பிரிவு, அதன் (3)ஆம் உட்பிரிவில், அதன் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

' "சட்டப்பிரதிநிதி" என்பது, மரணசாசன நிறைவேற்றுநர் அல்லது மரணச் சொத்து நிருவாகி ஒருவர் அல்லது நாற்பது இலட்ச ரூபாவுக்குக் குறைந்த பெறுமதியையுடைய மரணச்சொத்தின் விடயத்தில், மரபுரிமையை ஏற்று உரித்தாளராக வந்துள்ள ஆகக்கிட்டிய உறவினர் என்று பொருளாகும்:

ஆயின், எவ்வாறாயினும், சட்டப்பிரதிநிதி எவர் என்பதுபற்றி ஏதேனும் பிணக்கு எழுகின்ற பட்சத்தில், 397 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.'.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 394 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 394 ஆம் பிரிவு, அதன் (2)ஆம் உட்பிரிவில், "சட்டப்பிரதிநிதி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக் கணத்தை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

' "சட்டப்பிரதிநிதி" என்பது, மரணசாசன நிறைவேற்றுநர் அல்லது மரணச் சொத்து நிருவாகி ஒருவர் அல்லது நாற்பது இலட்சம் ரூபாவுக்குக் குறைந்த பெறுமதியையுடைய மரணச் சொத்தின் விடயத்தில், மரபுரிமையை ஏற்று உரித்தாளராக வந்துள்ள ஆகக்கிட்டிய உறவினர் என்று பொருளாகும்.'.

"முதன்மைச் சட்டவாக்கத்தின் 524 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 524 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்து விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :$

"(4) மனுதாரர் 529 ஆம் பிரிவின்கீழான அறிவித்தலை வெளியிடுவதற்கான செலவை மேவுதற்கான கட்டணக் கொடுப்பனவுக்கான எண்பிப்பை மனுவுடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 525 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 525 ஆம் பிரிவு "ஐந்து லட்சம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நாற்பது இலட்சம் ரூபா" , என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 527 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 527 ஆம் பிரிவு "ஐந்து லட்சம் ரூபா" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "நாற்பது இலட்சம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 528 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 528 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது :-

"(இ) விண்ணப்பத்திற்கு ஆட்சேபனைகள் எவையுமிருப் பின் அவ்வாட்சேபனைகளை 529 ஆம் பிரிவின்கீழான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கோப்பிடுமாறு அவர்களைத் தேவைப் படுத்தும், விண்ணப்பத்திற்கு சம்மதித்திராத எதிர்வாதி களுக்கான அறிவித்தல்களையும் ஒப்படைத்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் மரணசாசன தத்துவப்பத்திர அலுவலரால் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண் டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 529 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 529 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "பின்வருவன தொடர்பிலான தகவலை உள்ளடக்கிச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பின்வருவன தொடர்பில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "அறிவித்தல் தொடர் புறுத்துகின்ற எவரேனும் ஆளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "524 ஆம் அல்லது 528 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 530 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 530 ஆம் பிரிவு, "அத்தகைய அறிவித்தலில் பெயரிடப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மரணமெய்தியவரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 541 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 541 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "மரண சாசன அதிகாரப்பத்திரத்துக்கான அல்லது மரணச் சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரத்துக்கான அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழுக்கான மூலமனுவுக்கான எதிர்வாதிகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மரண மெய்தியவரின் மரபுரிமையாளர்களுக்கு அல்லது விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ள வேறு ஆட்களுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 545 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 545 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"குறித்த சில விடயங்களில் உரித்து மாற்றமெதுவும் செய்யப் படுதலாகாது.*

545. ஆளெவரும் உரித்து மாற்றத்தைப் பயனுறுத்துவதற்கு முன்னரான ஐந்தாண்டுகளுக்குள் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே மரண சாசனத்தை எழுதி வைத்துவிட்டு அல்லது எழுதி வைக்காமல் இறக்கின்ற எவரேனும் ஆளுக்குரித்தான அல்லது அவரது மரணச் சொத்தில் அல்லது உடைமைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள

இலங்கையிலுள்ள ஏதேனும் அசைவுள்ள அல்லது "அசைவற்ற ஆதனத்தில் நாற்பது இலட்சம் ரூபா அல்லது நாற்பது இலட்சம் ரூபாவை விஞ்சிய"; பெறுமதியுடைய மரணச் சொத்தை விட்டு வைத்து, மரண சாசனம் எழுதி வைத்துவிட்டு இறக்கும் ஆளொருவரின் விடயத்தில் மரணசாசன தத்து வப்பத்திரத்தின் அளிப்பு வழங்கப்பட்டிருந்தா லன்றி அல்லது மரண சாசனத்தினை எழுதி வைக்காமல் இறக்கும் ஆளொருவரின் விடயத்தில் மரணச்சொத்து நிர்வாகப்பத்திரம் அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந் தாலன்றி, ஏதேனும் உரித்து மாற்றத்தைச் செய்த லாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 554 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 554 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவில் "ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நாற்பது இலட்சம் ரூபாவை விஞ்சுகின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறைவான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நாற்பது இலட்சம் ரூபாவுக்குக் குறைவான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

*முதன்மைச் சட்டவாக்கத் திற்கான முதலாவது அட்டவணை யைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் படிவ இல. 82 என்பதற்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தை இடுவதன் மூலமும் :-

"இல. 82 (பிரிவு 517/524)

**மரணசாசன அதிகாரத்திற்கான அல்லது விருப்பாவணம் இணைக்கப் பட்ட மரணச் சொத்து நிருவாகத்திற்கான விண்ணப்பப் படிவம்**

இறந்தவரான அ, ஆ என்பவரின் விருப்பாவணம் சம்பந்தப்பட்ட வழக்கின் .............................. என்ற இடத்தைச் சேர்ந்த இ, ஈ. மனுதாரர்

1. ................................ என்ற இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவரான அ, ஆ என்பவர் 20... ஆம் ஆண்டு .......................... மாதம் ........... ஆம் திகதி இறந்தார்.

2. சொல்லப்பட்ட அ, ஆ என்பவர் 20....... ஆம் ஆண்டு .................... மாதம் ....... ஆம் தேதியிடப்பட்ட அவரது இறுதி விருப்பாவணத்தை முறையாக எழுதி நிறைவேற்றினார்.

(இப்பொழுது இந்நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளது அல்லது அத்துடன் சொல்லப்பட்ட விருப்பாவணம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது அல்லது விடயத்திற்கேற்ப ............................. 524 ஆம் பிரிவைப் பார்க்கவும்)

3. தங்களது மனுதாரரின் அறிவுக்கெட்டியவரை சொல்லப்பட்ட காலஞ் சென்றவரான அ, ஆ என்பவரின் மரபுரிமையாளர்கள்:-

4. தங்களது மனுதாரர் அதனை நிச்சயப்படுத்திக்கொள்ள இயலுமான அளவுக்கு இறந்தவரின் ஆதனத்தின் முழுமையானவையும், உண்மையான வையுமான விபரங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் அடங்கி உள்ளன.

5. தங்களது மனுதாரர் (விடயத்துக்கேற்ப மரணசாசனத் தத்துவக்காரர் கடன் தருநர் முதலியன) என்ற வகையில் உரிமை கோருகிறார்.

ஆதலால் தங்களது மனுதாரர் சொல்லப்பட்ட விருப்பாவணம் எண்பிக் கப்பட்டது எனவும் அத்துடன் அவரே சொல்லப்பட்ட விருப்பாவணத்தின் மரண சாசனத் தத்துவக்காரர் என வெளிப்படுத்தப்படலாம் எனவும், அத்துடன் அதற்கிணங்க அதன் மரணசாசன அதிகாரப்பத்திரம் அவருக்கு வழங்கப்படலாம் எனவும் வெளிப்படுத்தும் (அல்லது விடயம் அவ்வாறெனில், விருப்பாவணத்தின் பிரதி இணைக்கப்பட்ட மரணச்சொத்து நிருவாகப் பத்திரத்தின் அளிப்பொன்று, முதலியனவற்றுக்கு) கட்டளையொன்றைத் தாழ்மையுடன் வேண்டுகின்றார்.

(வரையறுக்கப்பட்ட அளிப்பொன்று கேட்கப்படின் அதனைக் குறிப்பிடவும்)
(முறைசார்ந்த முடிபு)

அட்டவணை

(சத்தியக் கடதாசி மூலம் அல்லது வாய்மொழிச்சான்று மூலம் 2 ஆம், 5 ஆம் பந்திகளுக்கு ஆதாரம் காட்டவும், மரண சாசனக்காரர் இலங்கைக்கு வெளியே இறந்தால் தனி மரணசாசன நியாயாதிக்கம் இருப்பதாக நீதிமன்றத்தை நியமிக்கும் கட்டளையொன்றை மனுதாரர் பெற்றிருப்பதாகக் குறிப்பிடவும்.).";

(2) அதன் படிவம் 83 என்பதற்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தை இடுவதன் மூலமும் :-

"**இல. 83** (பிரிவு 517)

**விருப்பாவணம் இல்லாதவிடத்து நிருவாகத்திற்கான அல்லது மரபுரிமை யாண்மைச் சான்றிதழுக்கான விண்ணப்பத்தின் படிவம்**

((இறுதிப் படிவத்தில் உள்ளவாறாக முறைப்படியான பாகங்கள் தொடரும்)

இறந்தவரான அ, ஆ என்பவரின் விருப்பாவணம் சம்பந்தப்பட்ட வழக்கின் ............................. என்ற இடத்தைச் சேர்ந்த இ, ஈ மனுதாரர்

*எதிராக*

(எதிர்வாதிகளாக மனுதாரரின் அறிவுக்கெட்டியவரை மரணசாசனம் எழுதப்படாது மரணமெய்தியவரின் மரபுரிமையாளர்களைப் பெயரிடவும்.)

1. ............................... என்ற இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவரான அ, ஆ என்பவர் 20... ஆம் ஆண்டு .......................... மாதம் .......... ஆம் திகதி இறந்தார்.

2. சொல்லப்பட்ட அ, ஆ என்பவர் இறுதி விருப்பாவணமொன்றை எழுதி நிறைவேற்றவில்லை/ சொல்லப்பட்ட அ, ஆ என்பவரின் இறுதி விருப்பாவணம் கண்டு பிடிக்கப்படவில்லை.

3. தங்களது மனுதாரரின் அறிவுக்கெட்டியவரை சொல்லப்பட்ட காலஞ்சென்றவரான அ, ஆ என்பவரின் மரபுரிமையாளர்கள்:-

4. தங்களது மனுதாரர் அதனை நிச்சயப்படுத்திக்கொள்ள இயலுமான அளவுக்கு இறந்தவரின் ஆதனத்தின் முழுமையானவையும், உண்மையானவையுமான விபரங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் அடங்கி உள்ளன.

5. தங்களது மனுதாரர் (விடயத்துக்கேற்ப கடன் தருநர் முதலியன) என்ற வகையில் உரிமை கோருகிறார்.

ஆதலால் தங்களது மனுதாரர் சொல்லப்பட்ட மரண சாசனமில்லாது இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்கு (கடன் தருநர் அல்லது விடயத்திற்கேற்ப உள்ளவாறு) என்றவாறு உரித்துடையவர் என்பதனை வெளிப்படுத்துவதும் அத்துடன் சொல்லப்பட்ட மரணச் சொத்தின் நிருவாகப்பத்திரம் அல்லது அதற்கான மரபுரிமையாண்மைச் சான்றிதழ்கள் அதற்கிணங்க அவருக்கு வழங்கப்படவேண்டும் எனப் பணிப்பதுமான கட்டளையொன்றைத் தாழ்மையுடன் வேண்டுகிறார். (வரையறுக்கப்பட்ட அளிப்பொன்று கேட்கப்படின் அதனைக் குறிப்பிடவும்)

(முறைசார்ந்த முடிப்பு)

அட்டவணை

(சத்தியக் கடதாசி மூலம் அல்லது வாய்மொழிச்சான்று மூலம் 2 ஆம், 5 ஆம் பந்திகளுக்கு ஆதாரம் காட்டவும். மரணமெய்தியவர் இலங்கைக்கு வெளியே இறந்தால் தனி மரணசாசன நியாயாதிக்கம் இருப்பதாக நீதிமன்றத்தை நியமிக்கும் கட்டளையொன்றை மனுதாரர் பெற்றிருப்பதாகக் குறிப்பிடவும்.)"; அத்துடன்

(3) அதன் படிவம் 84 என்பதற்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தை இடுவதன் மூலமும் :-

"**இல. 84** (பிரிவு 529 (2))

**மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரால் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தலின் படிவம்**

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ......................... ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.

இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச்சொத்து தொடர்பில் விருப்பாவணத்தை எண்பிப்பதற்கான/ மரணசாசன நிருவாகப் பத்திரத்தின் அளிப்புக்கான/ மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களின் வழங்குகைக்கான பின்வரும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒரு விருப்பாவணம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி அல்லது மனுக்களில் பெயர் குறிக்கப்பட்ட ஆட்களுக்கு மரணசாசன அதிகாரப் பத்திரத்தின் அல்லது விருப்பாவணமொன்று இணைக்கப்பட்டோ இணைக்கப்படாமலோ மரணசாசன நிருவாகப்பத்திரத்தின் அளிப்பிற்கென அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ்கள் வழங்கலுக்கென கட்டளையொன்று ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும் அத்தகைய ஆட்சேபனையை சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன் கீழே குறித்துரைக்கப்பட்ட அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களால் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் எழுத்தில் செய்தல் வேண்டும்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| .................... மாவட்ட நீதிமன்றம்<br>ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 20................ மாதம் ............. ஆம் நாளாகும். | | | |
| **அட்டவணை** | | | |
| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
| மாவட்ட நீதிமன்றம் பதிவு இல. | இறந்தவரின் பெயரும் முகவரியும் | இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா | விண்ணப்ப காரரின் பெயரும் முகவரியும் |
| | | | |

மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்.

திகதி :............ ................................ மாவட்ட நீதிமன்றம்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***14***. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்